## ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவிற்கு மீண்டும் வருகையாளர்களை ஈர்க்க

# டிபிகேஎல் முனைப்பு



கோலாலம்பூர், செப். 11-

ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதிக்கு மக்கள் அதிகமாக வருவதைக் கவரும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அங்கு வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தை (டிபிகேஎல்) கேட்டுக் கொண்டுள்ளனர்.

அப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளை மீட்சிப்பெறச் செய்வதற்கு இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போது கோலாலம்பூர் மாநகர் மன்றமும் சம்பந்தப்பட்ட அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து மஸ்ஜிட் இந்தியா பகுதியை மீட்சிப்பெறச் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

அது மட்டுமன்றி அந்த இடம் பொதுமக்களுக்குப் பாதுகாப்பானதுதான் என்பதை உறுதி செய்ய அண்மையில் ஏற்பட்ட நில அமிழ்வுக் காரணமாக பழுதடைந்த பகுதிகளையும் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி அங்கு பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை அடுத்து லோரோங் துவாங்கு அப்துல் ரஹ்மான் பசார் மாலாம் நடவடிக்கைகளை மறுசீரமைப்பதற்கும் டிபிகேஎல் தரப்பு பரிந்துரையை முன்வைத்துள்ளதாக அதன் கார்ப்பிரெட் திட்டமிடல் இலாகா ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் அண்மையில் நிகழ்ந்த நில அமிழ்வு தொடர்பான தற்போதைய நிலவரம் குறித்து தகவல் தெரிவிக்க டிபிகேஎல் தரப்பு இரண்டு முறை சம்பந்தப்பட்ட தரப்புடன் சந்திப்பு நடத்தியுள்ளது.

குறிப்பாக அந்தப் பகுதியில் சீரமைப்புப் பணிகள் எந்த அளவுக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறித்தும் அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் விஸ்மா யாக்கினில் இருந்து போலீஸ் முகப்பிடம் வரையில் சுமார் 160 மீட்டருக்கு ஒரு பகுதிச் சாலை மூடப்பட்டுள்ளது.

அங்கு நில அமைப்பு, வசதிகள் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக இந்தச் சாலை மூடப்பட்டிருக்கிறது எனவும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் குறிப்பிட்டுள்ளது.